**கவனிக்க.-** *2015.03.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1907 - 2015 මාර්තු මස 20 වැනි සිකුරාදා - 2015.03.20

*1907 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 370 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 371 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 375 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மாச்சு மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

*மாளிகாவத்தை புகையிரத திறந்தவெளியிலுள்ள பாவனைக்கொவ்வாத பெட்டிகள் மற்றும் தெமட்டகொட 26 ஆம் பிரிவிலுள்ள பாவனைக்கொவ்வாத லொக்கோ மோட்டிவ்களை (புகையிரத என்ஜின்கள்) அகற்றல்*

மாளிகாவத்தை புகையிரத திறந்த வெளியிலுள்ள பாவனைக்கொவ்வாத பெட்டிகள் மற்றும் தெமட்டகொட 26 ஆம் பிரிவிலுள்ள பாவனைக்கொவ்வாத லொக்கோ மோட்டிவ்களை அகற்றுவதற்காக கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத தலைமை அலுவலகம், இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தவிசாளர் அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

2. 2015.03.31 ஆந் திகதி பி. ப. 2 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

3. புகையிரத சேவைகள் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணமான 5,000 ரூபாவை (ஐயாயிரம் ரூபா மாத்திரம்) செலுத்திய பின்னர் 2015.03.30 ஆந் திகதி பி. ப. 3.00 மணிவரை கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவற்றை மூடியவுடன் உடனடியாகவே கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத தலைமையகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரடியாக பின்வரும் முகவரியில் ஒப்படைக்கலாம் :-

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

6. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகருடன் 2438078, 2436818 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும், 2432044 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாகவும் தொடர்புகொள்ளவும்.

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. SRS/F.7205

3-570

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

இலங்கை புகையிரத சேவைகளுக்கு 36,000 எண்ணிக்கையுள்ள Bolts மற்றும் Nuts ஆகியவற்றிற்கான பெறுகை

36,000 எண்ணிக்கையுள்ள Bolts மற்றும் Nuts ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தவிசாளர் பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்களது விலைமனுக்களை நேரடியாக அல்லது இலங்கையில் பதிவுபெற்ற தராதர அங்கீகாரம் பெற்ற மற்றும் அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்ட முகவர் ஒருவரின் மூலமாகவும் அனுப்பலாம்.

2. இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணமாக இலங்கைப் பணத்தில் 3,000 ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய சமமான நாணயத்தில் 2015.04.23 ஆந் திகதி பி. ப. 3.00 மணிவரை (இலங்கை நேரம்) வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களில் இத்தொகையைச் செலுத்திய பின்னர் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. 2015.04.24 ஆந் திகதி பி. ப. 2 மணிக்கு (இலங்கை நேரம்) விலைமனுக்கள் மூடப்படும்.

4. Bolts மற்றும் Nuts ஆகியவற்றின் உற்பத்தியாளர்/வழங்குநர் ஆகியவற்றின் நிறுவனங்கள் ISO 9001:2008 என்ற தரச் சான்றிதழை உடையவர்களாகவும் அல்லது கொள்வனவுகாரரினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமமான சர்வதேச தர முகாமைத்துவ முறைமைகள், நிலையான முறைமைத் தரமொன்றை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

5. இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களை மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியவர்களைச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அல்லது கீழுள்ள முகவரியில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் :-

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

7. இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
ஒல்கட் மாவத்தை, கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2438078 அல்லது 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11)2432044.

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

3-571

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, கோட்டை, மதிவல, கிறீன் பீல்ட் பார்க், இலக்கம் 29/2 எனும் விலாசத்தில் நடாத்திவரும் விஸ்பரீங் வுட்ஸ் போரஸ்ட்ரீ (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 17352) எனும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் மறுபதிவு செய்யப்பட்ட நிறுவனமாகிய நாம், கொழும்பு பிரசித்திபெற்ற நொத்தாரிசான ஷரன் ரூஷேங்கா ஹரிச்சந்திர என்பவரால் 2014.06.19 ஆந் திகதிய அற்றோணித் தத்துவ இலக்கம் 52 மூலம் எழுதி உறுதிப்படுத்தப்பட்டு இலங்கை, வத்தளை, ஹுனுப்பிட்டிய, வேவல்துவ வீதி, இலக்கம் 12/1/பி எனும் விலாசத்தின்கீழ் நடாத்திவரும் த காசல்ஸ் தெல்தோட்ட (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 97578) எனும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இது முதல் வலுவிழக்கச் செய்து இரத்துச்செய்து விட்டதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றது.

இதன் பின்னர் மேற்படி அதிகாரத்தைப் பயன்படுத்தி விஸ்பரீங் வுட்ஸ் போரஸ்ட்ரீ (பிறைவேட்) லிமிட்டெட்டின் பெயரில் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாட்டிற்கும் விஸ்பரீங் வுட்ஸ் போரஸ்ட்ரீ (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனம் பொறுப்பல்ல என அறியத்தருகின்றோம்.

விஸ்பரீங் வுட்ஸ் போரஸ்ட்ரீ (பிறைவேட்) லிமிட்டெட்.

3-635

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-*

*கம்பனியின் பெயர்* : வினு இன்டர்நஷனல் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 104092
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.02.25
*பதிவு அலுவலகம்* : இல. 59, 2 ஆவது மாடி, டீ. எஸ். சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 8

பினான்சியெல் அன்ட் பிசினெஸ்
அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3-602

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் முன்னைய பெயர்* : அமர இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 72136
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 7/1, 2 ஆவது ஒழுங்கை, சுபாதிராராம வீதி, கங்கொட வில, நுகேகொடை
*கம்பனியின் புதிய பெயர்* : அமா வெப் சொலுஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஆர். கே. எல். எஸ். கோர்ப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

3-595

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : வொட்சன்ஸ் கொம் (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைப்புத் திகதி* : 2015.01.29
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 99816
*பதிவு முகவரி* : இல. 116, காலி வீதி, கொழும்பு 6

3-553

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

பன்னிபிட்டிய, ருக்மலே, இல. 164/2 என்னும் இடத்தில் வதியும் 741461056ஏ என்னும் தேசிய ஆள் அடையாள இலக்கத்தினை உடைய ஹர்ஷ இந்திரஜித் வீரகோன் என்னும் என்னால் பன்னிபிட்டிய, மாலபல்ல, அத்துருகிரிய வீதி, இல. 218/பி என்னும் இடத்தில் வதியும் சுபசிங்க ஆரச்சிகே சிசில் சுபசிங்க என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த 2004.11.18 ஆந் திகதி திரு. எச். எம். டி. ஹதுருசிங்க பிரசித்த நொத்தாரிசு மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 4631 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடிரசின் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஹர்ஷ இந்திரஜித் வீரகோன்.

3-555

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், வைஏஎஸ் லேண்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : வைஏஎஸ் லேண்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 102126
*பதிவு அலுவலகம்* : இல. 265/7ஈ, சமகி மாவத்தை, பெலன்வத்த, பன்னிபிட்டி

சபையின் கட்டளைப் பிரகாரம்.

3-552

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஆர் ஆர் இன்டர்நஷனல் ட்ரேடிங் (பீவீரீ) எல்ரீடி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 194129
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.12.29
*முகவரி* : இல. 66, நியூ நிஹாம் சதுக்கம், கொழும்பு 13

கிறிஸ்தோப்பர் பெர்னாண்டோ,
கம்பனிச் செயலாளர்.

3-545

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : அம்மா ஸ்பெயர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 103894
*கூட்டிணைப்புத் திகதி* : 2015.02.19
*பதிவு முகவரி* : இல. 28, புனித அந்தோனியார் மாவத்தை, கொழும்பு 3

*மிச்செல் அன்ரோனி எடிசன்,*
*கம்பனிச் செயலாளர்.*

*3-544*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், ஃபேம் ஒய்ல் (பிறைவேட்) லிமிட்டெட் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 3 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஃபேம் ஒய்ல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 101302
*பதிவு அலுவலகம்* : இல. 53, சுபுத்தி மாவத்தை, ஸ்ரீ சுபுத்திபுர, பத்தரமுல்லை

*சபையின் கட்டளைப் பிரகாரம்.*

*3-549*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், ஒமெக் க்ளோபல் (பிறைவேட்) லிமிட்டெட் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஒமெக் க்ளோபல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 102994
*பதிவு அலுவலகம்* : இல. 519, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 8

*சபையின் கட்டளைப் பிரகாரம்.*

*3-550*

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், மெல்ஹெய்ம் ரிசோட் கெண்டி (பிறைவேட்) லிமிட்டெட் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : மெல்ஹெய்ம் ரிசோட் கெண்டி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 103003
*பதிவு அலுவலகம்* : இல. 45/2, ஜாவத்த வீதி, கொழும்பு 5

*சபையின் கட்டளைப் பிரகாரம்.*

*3-551*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ப்ரொபேக் ட்ரேடிங்க (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவிலக்கம்* : பீவீ 103966
*கூட்டிணைப்புத் திகதி* : 2015.02.20
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 300/சீ, சுவர்ணபாயவத்தை பாதை, கொலமுன்ன, மடபாத்தை பாதை, பிலியந்தலை

*கம்பனிச் செயலாளர்.*

*3-469*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதியன்று பதிவுசெய்யப்பட்டு கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : லங்கா பிஸ்னஸ் ஒன்லைன் லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 103769
*பதிவு முகவரி* : 1 ஆம் மாடி, இல. 155ஏ, பேஸ்லைன் வீதி, கொழும்பு 8

*டபிள்யூ. எம். கே. கே. வீரசேகர,*
*கம்பனிச் செயலாளர்.*

*3-459*

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நுகேகொடை, நாவலை வீதியில் உள்ள சரசவி உயனவில் இருக்கும் இல. 10/1 இல் வசித்து தற்போது ஐக்கிய இராச்சியத்தில் உள்ள லண்டன் நகரில் இருக்கும் சுனேத்ரா அமரசிங்க ஆகிய நான், மாதிவெல கோட்டேயில் உள்ள சிகேரா வீதியில் இருக்கும் இல. 262 இல் வசிக்கும் அமரசிங்க ஆரச்சிகே சசீமா சிராணி சேனாரத்ன என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஆனந்த எஸ். விஜயசூரியவினால் அத்தாட்சிப்படுத்தப் பட்டு என்னால் வழங்கப்பட்ட 2006.05.31 ஆந் திகதியிடப்பட்டதுமான 92 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணி தத்துவம் 2015, மாச்சு மாதம் 1 ஆந் திகதியிலிருந்து இரத்துச்செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப் படுகின்றது எனவும், இதன் பின் மேற்கூறிய அமரசிங்க ஆரச்சிகே சுசீமா சிராணி சேனாரத்னவினால் செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் எதுவித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாளி யல்ல என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருகிறேன்.

சுனேத்ரா அமரசிங்க.

3-487

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சம்பத் டைவிர்சிபய்ட் அன்ட் பிரிட்ஜ் புளூ குளோபல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பீவீரீ) எல்ரீடி
கம்பனி இலக்கம் : பீவீ 97890
அலுவலக முகவரி : இல. 55, மாத்தளை வீதி, எலகடுவ

3-474

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : மஹின் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு முகவரி : இல. 115/4, 7 ஆவது ஒழுங்கை, ரம்பத் வீதி, கோட்டை
பதிவு இலக்கம் : பீவீ 102176
பதிவுத் திகதி : 2014.11.17

3-493

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ரஷ்யா, கலுகா 248000, ஸ்மொலென்ஸ்கி, 4-68 மற்றும் தற்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நாவலடி எஸ்ட்டேட், கல்பிட்டிய என்ற முகவரியில் வசிக்கும் ட்மிட்ரி ப்லொட்கோ ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நாவலடி எஸ்ட்டேட், கல்பிட்டிய என்ற முகவரியில் வசிக்கும் அலெக்சி ஸ்மிர்னொவ் என்பவருக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு மைக்கல் பிரட்ரிக் ஸ்புருல் அவர்களால் 2015.01.07 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட 4130 ஆம் இலக்க பொது அற்றோணித் தத்துவப்பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இரத்துச் செய்கிறேன்.

ட்மிட்ரி ப்லொட்கோ.

3-495

---

## கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

பீறா சின்தற்றிக் வைபர் (பிறைவேட்) லிமிட்டெட்
(அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)

கம்பனியின் பதிவு இல. பீவீ 2153

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவின்கீழ், மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2015 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24 ஆந் திகதி பி. ப. 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 2 இல் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அறையில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தல் பற்றிய விபரங்களை அங்கத்தவர்களுக்குச் சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அது-

(1) ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது,
(2) கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை ; மற்றும்
(3) இவை பற்றிய விளக்கம் அளித்தல்.

ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்,
பீறா சின்தற்றிக் வைபர் (பிறைவேட்) லிமிட்டெட்.

3-494

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : மைனா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 104023
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015, பெப்புருவரி 24
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : 6 ஆம் மாடி, "பார்க்வே" கட்டிடம், இல. 48, பார்க் வீதி, கொழும்பு 5

பணிப்பாளர்.

3-523

# ஏல விற்பனைகள்

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – கொட்டாவ கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-*

**அட்டவணை**

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து சல்பிட்டி கோரளையில் கெஸ்பாவ நகரசபை எல்லையில் பெலன்வத்த கிராமத்தில் அமைந்துள்ள தெல்காகனத்த காணிக்கு நிலஅளவை யாளர் என். பி. எல்விட்டிகல 2007.06.04 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2883 இல் காண்பிக்கப்பட்ட பகுதிப்படுத்திய லொட் 1 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து.***

**காணியின் விஸ்தீரணம் :**
**இருபது தசம் ஆறு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 20.65பே.)**

*(கடன் எடுத்த இலங்கை கம்பனி சட்டப்படி தாபிக்கப்பட்ட பன்னிபிட்டிய, பெலன்வத்த, 16/50 ஆம் பதிவிலக்கத்தில் அமைந்துள்ள திலக்க கன்சல்ட்டன் சணலிங் மற்றும் லபோரட்டரி டயகனைசிங் சேர்விஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த புளுபிட்டியகே டொன் சஞ்ஜீவ ரத்தனதிலக்க மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்கள்.)*

இங்கு மேலே விவரிக்கப்படும் காணி என்னால் பகிரங்க ஏலத்தின் மூலம் 2015, ஏப்பிறல் 10 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- 2014.02.28 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ‘‘லக்பிம’’, ‘‘த ஐலண்ட்’’ மற்றும் ‘‘வீரகேசரி’’ பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத் திற்காக 2015.03.20 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2015.03.20 ஆந் திகதியுடைய ‘‘லக்பிம’’, ‘‘த ஐலண்ட்’’ மற்றும் ‘‘வீரகேசரி’’ பத்திரிகைகளையும் பார்க்கவும்.

***காணியைச் சென்றடையும் விதம்.***- கொட்டாவையில் பொல்கஸ் ஓவிட்ட வீதியில் 1.1 கி. மீற்றர் சென்று வலது பக்கம் திரும்பி, பிலியந்தலை வீதியில் 300 மீற்றர் சென்ற பிறகு இக்காணி இடது பக்கத்தில் அமைந்துள்ளது. (வீதியின் முன்பாக உள்ள மாணாம்ம பெயின்ட் சென்ரர் முன்னால்).

***கொடுப்பனவு செலுத்தும் விதம்.***- வெற்றிபெற்ற கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) VAT வரி.

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது கொட்டாவ கிளையில் செலுத்த வேண்டும்.

*வேறு விபரங்களுக்காக.*- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 71, ஹைலெவல் வீதி, கொட்டாவ. தொலைபேசி இல. : 011-2781059, 011-2781061 ; தொலைநகல் இல. : 011-2781070.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182,
3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.

3-590

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – கல்கிஸ்ஸ கிளை

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என்று சொல்லப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**மிகவும் பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

கடன் எடுத்த ஜோனமஸ் அப்பரல் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த வைத்யரத்ன ஹேரத் முதியன்சலாகே மனோஜ் ரம்யா புஸ்பாகாந்த வைத்யரத்ன ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக மொரட்டுவ பிரசித்த நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்திய 2004.05.30 ஆந் திகதிய 6931 ஆம் இலக்க 2005.11.29 ஆந் திகதிய முறி இலக்கம் 7230 மற்றும் 2007.06.26 ஆந் திகதிய முறி இலக்கம் 7934 மற்றும் 2008.05.06 ஆந் திகதிய முறி இலக்கம் 8331, 2012.08.21 ஆந் திகதிய முறி இலக்கம் 9955 மற்றும் 2012.12.03 ஆந் திகதிய முறி இலக்கம் 10053 மூலம் செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளில் தவறுகை புரிந்துள்ளதாலும் மற்றும் மிகுதித் தொகையும் வட்டியும் ஏலதாரர் கட்டணங்களையும் அறவிடுவதற்காக இதன்கீழ் விபரிக்கப்பட்ட காணியை ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பகிரங்க ஏல மூலம் அதே இடத்தில் 2015, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**முதலாம் அட்டவணை**

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து, சல்பிட்டி கோரலயில் தெஹிவளை-கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையில் வாட் இல. 18, வித்யாலய, கல்கிஸ்ஸ, காலி வீதி, கட்டிட இலக்கங்கள் 330 மற்றும் 330ஏ அமைந்துள்ள காட்காவத்த என்ற காணியின் நிலஅளவை யாளர் ஜே. எம். டபிள்யு. சமரநாயக்க 2003.06.16 ஆந்***

***திகதிய வரைபட இலக்கம் 1886 இல் காண்பிக்கப்பட்ட பகுதி படுத்திய லொட் ஏ என்ற காணி மற்றும் இக்காணியிலுள்ள கட்டிடங்கள் அனைத்தையும் சேர்த்து.***

**காணியின் விஸ்தீரணம் :**
**ஒன்பது தசம் எட்டு மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 9.83பே.)**

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2014.09.08 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2014.09.12 ஆந் திகதியுடைய "லக்பிம", "டெயிலி மிரர்", "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***காணியைச் சென்றடையும் விதம்.***- *காலி வீதி ஊடாக கல்கிஸ்ஸ வர்த்தக மத்திய நிலையம் சென்று கட்டிட இல. 330 மற்றும் 330ஏ அடைய முடியும். இங்கு ஜோனமஸ் அப்பரல் (பிறைவேட்) லிமிட்டெட் வர்த்தக நிலையம் அமைந்துள்ளது. தேசிய சேமிப்பு வங்கிக் கட்டிடம் முன்னால் கல்கிஸ்ஸ பஸ் தரிப்பிடம் மற்றும் சுப்பர் மார்க்கெட்டை அடையலாம்.*

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;

*மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் 10% சதவீத முற்பணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடப்படும்.*

*வேறு விபரங்களுக்காக.- சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடுதல்), ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி இல. : 011-2664664.*

*எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),*
*சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*இல. 182,*
*3 ஆவது மாடி,*
*புதுக்கடை வீதி,*
*கொழும்பு 12.*
*தொலைபேசி/தொலைநகல் இல. : 011-2396520, 011-2445393.*

*3-588*

---

**தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பகிரங்க ஏல விற்பனை**

தெஹிவளை, நெதிமால, ரூபசிங்க மாவத்தையில் 26/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட பரப்பளவில் 7.37 பேர்ச் கொண்ட பெறுமதிவாய்ந்த காணியும் கட்டிடமும்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் 536, நெதிமால கிராம அலுவலர் பிரிவினுள்ளும் தெஹிவளை பிரதேச செயலகத்தினுள்ளும் தெஹிவளை, நெதிமால, ரூபசிங்க மாவத்தையில் 26/1 ஆம் இலக்கத்தில் அமைதுள்ளதும், தொம்பகஹாவத்த என அழைக்கப்படும் காணியின தாய் (2795 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 1 மற்றும் 2 இன் ஒன்றுசேர்க்கையாகவுள்ளதும்), 4729 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் ஏ என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்.

இலங்கையில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக வுள்ளதும், அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை கொழும்பு 3 இல் கொண்டுள்ளதும் (முன்னர் கிறீன்விச் லங்கா (பீவீரீ) லிமிட்டெட் என அறியப்பட்டதுமான) கிறீன்விச் லங்கா பீஎல்சீ உம், ஷாஹிதுல் ஹிஜிரி மொஹமட் ரிஷானும் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் 1176 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால் , சொல்லப்பட்ட வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் 2015, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து மேலே குறிப்பிடப் பட்டுள்ள ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வேன்.

மேலதிக விபரங்களுக்காக.- 2014.05.09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியையும், 2014.04.30 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" பத்திரிகை களையும் பார்க்கவும்.

***காணியைச் சென்றடையும் விதம்.***- தெஹிவளை சந்தியிலிருந்து ஏறத்தாழ 1.6 கி. மீ. தூரத்துக்கு பெல்லந்தர வீதி வழியாக நெதிமாலை அரச மரச் சந்திவரை சென்று அங்கிருந்து இடதுபக்கம் திரும்பி ஏறத்தாழ 200 மீற்றர் தூரத்துக்கு பெப்பிலியான வீதி வழியாகச் சென்று இடதுபக்கம் ரூபசிங்க மாவத்தைக்குத் திரும்பி ரூபசிங்க மாவத்தையின் வலது பக்கத்தில் அமைந்துள்ள ஆதனத்தைச் சென்றவடைவதற்கு மேலும் 250 மீற்றர் தூரம் செல்லவும்.

***கொடுப்பனவுகளைச் செய்யும் முறை.***- ஏல விற்பனை முடிவுற்றதன் பின் கொள்வனவாளராக வரவுள்ளவர் பின்வரும் பணத்தைச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%, (2) உள்ளூரதிகார சபை விதிப்பனவுகளும், அவற்றின் மீதான சேர்பெறுமதி வரியும் 1%, (3) ஏல விற்பனையாளரின் விதிப் பனவுகள் 2 1/2%, (4) விளம்பரக் கட்டணங்களின் முழுச் செலவும், (5) எழுதுவினைஞரினதும் கூவுவோனினதும் கட்டணம் 1,500 ரூபா ; (6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தியமைக்காக நொத்தாரிசுவின் கட்டணமான 3,000 ரூபா முதலியன.

கொள்வனவு விலையின் மீதி 90% ஐ ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்து உறுதிகளையும் ஏனைய ஆவணங்களையும் பார்வையிடுவ தற்காக கொழும்பு 2, நவம் மாவத்தை, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, சட்ட அறவீடுகள்- முகாமையாளருடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல.: 2448448, 011-7448448.

பி. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், பெறுமான மதிப்பீட்டாளர்,
பட்டயம்பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. : 2873656, 0777-672082.
தொலைநகல் இல. : 2871184.

*3-593*

**மக்கள் வங்கி - நிறுவன வங்கிப் பிரிவு**

(இல. 91/6, புதிய நுகே வீதி, பேலியகொடை)

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏல விற்பனை**

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அலுத்குரு கோரளே, றாகம்பத்து, பேலியகொடை பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட பேலியகொடை ஒன்றிணைந்த அபிவிருத்தித் தொகுதியிலுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். கே. பி. மாவலகெதர அவர்களால் வரையப்பட்ட 1985 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதியிடப்பட்ட 8502-1 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 18 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப் பட்டதுமான காணித்துண்டின் குத்தகை உரிமை மீது.***

**மேலே குறிப்பிடப்பட்ட காணித்துண்டு 18 ஆனது, வடக்கு மற்றும் மேற்கே துண்டு 21, கிழக்கே துண்டு 19 மற்றும் தெற்கே துண்டு 4 என்பனவற்றின் எல்லைகளாகும்.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 13.15பே. அல்லது 0.03325 ஹெக்டெயர்)**

***துண்டு 21 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக் கப்பட்டதுமான காணித்துண்டின் குத்தகை உரிமை (கால்வாய்க் கென ஒதுக்கப்பட்டுள்ளது).***

***துண்டு 04 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக் கப்பட்டதுமான காணித்துண்டின் குத்தகை உரிமை (25 அடி அகலமான பாதைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது).***

*(ஷன்கெம் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

*மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 9 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கும் எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.*

***தீர்மான அறிவித்தலுக்கு.-*** *தயவுசெய்து 2010, யூன் மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியைப் பார்வையிடவும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.-*** *ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-*

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

*கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் கொழும்பு 10, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 35 இல் அமைந்துள்ள மக்கள் வங்கி நிறுவன வங்கிப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளரிடம் (அறவீடு) செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இலக்கம் : 011-2320651-6.*

*காணி உறுதியின் பிரதிகளையும் ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% வீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.*

*முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.*

*சொக்மன் அன்ட் சமரவிக்ரம,*
*ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,*
*123 வருட கால மகோன்னத சேவையுடன்.*

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும் :* |
| --- | --- |
| *24, டொரிங்டன் வீதி, கண்டி.* | *290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5.* |
| *தொலைபேசி : 081-2227593* | *தொலைபேசி : 011-2502680 011-2585408* |
| *தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371* | *தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176* |
| *மின்-அஞ்சல் :* schokmankandy@sltnet.lk | *மின்-அஞ்சல் :* schokman@samera1892.com |

*இணையத்தளம் :* www.sandslanka.com

*3-609*

---

**மக்கள் வங்கி - கடவத்தை கிளை**

(விசேட சொத்துக்கள் பிரிவு)

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே, பள்ளேபற்று, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட திம்பிரிகஸ்யாய பிரிவில் அமைந்துள்ள இல. 90 (பகுதி), ஜாவத்தை வீதி என்ற முகவரியைக் கொண்டுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவை யாளர் சீ. டி. எஸ். குணதிலக்க அவர்களால் வரையப்பட்ட 1972 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதிய 310 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 10 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டு (அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஜே. எல். மார்டன்ஸ்ரைன் அவர்களால் வரையப்பட்ட 1966 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட 506 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ, பி, சீ, டி, ஈ. எப். ஜீ. மற்றும் ஜே எனக் குறிப்பிடப்பட்டுள்ள***

***ஒன்றிணைந்த காணித்துண்டுகளின் பகுதியைப் பிரித்தலும் மீள் அளவையும்.)***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 2றூ. 2.0பே.)***

***மேலே குறிப்பிடப்பட்ட 310 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய அதிலுள்ள தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக. இல. ஏ886/201 இன்கீழ் கொழும்பு காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.***

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளேபத்து, கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட திம்பிரிகஸ்யாய பிரிவில் அமைந்துள்ள இல. 90 (பகுதி), ஜாவத்தை வீதி என்ற முகவரியைக் கொண்டுள்ள அனுமதிப்பத்திரம்பெற்ற நில அளவையாளர் சீ. டீ. எஸ். குணதிலக அவர்களால் வரையப்பட்ட 1972 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 310 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 7 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு (அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஜே. எல். மார்டன்ஸ்ரைன் அவர்களால் வரையப்பட்ட 1966 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட 506 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ, பி, சீ, டி, ஈ. எப். ஜீ. மற்றும் ஜே எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்றிணைந்த காணித்துண்டுகளின் பகுதியைப் பிரித்தலும் மீள் அளவையும்.)***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 2.25பே.)***

***மேலே குறிப்பிடப்பட்ட 310 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய, அதிலுள்ள தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக இல. ஏ886/203 இன்கீழ் கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.***

*மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.*

***தீர்மான அறிவித்தலுக்கு.-*** *தயவுசெய்து 2002, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய "தினமின" மற்றும் 2002, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிய "சிலோன் டெயிலி நியூஸ்" செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.-*** *ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;*
*(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்) ;*
*(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;*
*(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;*
*(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ;*
*(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.*

*கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் "கொழும்பு 02, சேர். சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் (1 ஆவது மாடி) உள்ள பிரதம முகாமையாளர் - அறவீடுகள், விசேட சொத்துக்கள்" பிரிவில் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இலக்கம் : 011-2481668, 011-2481546 ; தொலைநகல் இல. : 011-2431033.*

*காணி உறுதியின் பிரதிகளையும் ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படா விட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% வீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.*

*முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.*

*சொக்மன் அன்ட் சமரவிக்ரம,*
*ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,*
*123 வருட கால மகோன்னத*
*சேவையுடன்.*

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும் :* |
|---|---|
| *24, டொரிங்டன் வீதி, கண்டி.* | *290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5.* |
| *தொலைபேசி : 081-2227593* | *தொலைபேசி : 011-2502680, 011-2585408* |
| *தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371* | *தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176* |
| *மின்-அஞ்சல் :* schokmankandy@sltnet.lk | *மின்-அஞ்சல் :* schokman@samera1892.com |

*இணையத்தளம் :* www.sandslanka.com

*3-610*

---

**டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

*(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துகள் பகிரங்க ஏல விற்பனை**

***17190 மற்றும் 17905 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல ஹத்பத்து, மெத்தெகெட்டிய கோரளை, பள்ளே ஹொரம்பவ**

***கிராமத்தில் அமைந்துள்ள, அம்பகஹமுலவத்த என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. பீ. குமாரசிங்க அவர்களால் வரையப்பட்ட 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட 31/2011 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு அதிலுள்ள கட்டிடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக குளியாப்பிட்டி காணிப்பதிவகத்தில் என் 148/ 186 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1று. 24.4பே.)***

*(குருநாகல் பிரசித்த நொத்தாரிசு சென்ட்ரா பெவர்லி வந்துராகல அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதியிடப்பட்ட 17190 ஆம் இலக்க மற்றும் 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட 17905 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் ஹொரம்பாவ ஜப்பான் லங்கா என்டர்பிரைசஸ் எனும் பெயரில் பங்குடைமைத்துவத்துடன் வியாபாரத்தை நடத்திவரும் ஹொரம்பாவயில் வசிக்கும் மொஹமட் மர்ஷா மொஹமட் மில்ஹான் மற்றும் மொஹமட் பரீட் சித்தி றபீனா ஆகியோரால் டீஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.*

டீஎப்சீசீ வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 78,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்புகொள்ளவும்.

''முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.''

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

3-611

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை தெற்கு, கோஹோன்ஷிய பற்று, தொடன்தெனியவில் அமைந்துள்ளதும் ''பங்களாகும்புர (ஹுலன்கமுவ எஸ்ட்டேட்)'' விற்குப் புறம்பாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஓ. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 2002.01.07 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2265 இல் துண்டு 2 என குறிப்பிடப்பட்டது) ஏல விற்பனை**

***(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 2று. 02.0பே.)***

*(''ஈடுவைத்தவரான/ கடப்பாடுடையவரான ரகித்த லக்ஷான் அத்துருசிங்ஹ மற்றும் கடப்பாடுடையவரான அத்துருசிங்ஹ ரஜமந்திரிலாகே சரத் ஆனந்த ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு கொலித்தா எஸ். பி. விஜேரட்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2012, யூலை 19 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 3000 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)*

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.-** மாத்தளை பசாரிலிருந்து ஹுலங்கமுவ வீதி வழியே ஏறக்குறைய 850 மீற்றர் சென்று, கந்தேகெதர வீதி சந்திவரை மேலும் 120 மீற்றர் சென்று, விற்பனைக்குரிய இவ்வாதனத்தை அடைவதற்கு கந்தேகெதர வீதி வழியே 400 மீற்றர் செல்லவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2015, ஏப்பிறல் 8 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2014, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2015.03.06 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''லக்பிம'' மற்றும் ''சுடர் ஒளி'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம் மட்டும்) ;
4. விளம்பரக் கட்டணங்களின் செலவு ;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணங்கள் ;
6. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500 ரூபா மற்றும் விற்பனையில் உறப்பட்ட ஏனைய கட்டணங்கள் ;

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதமும்) விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல.450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., சட்ட சம்பந்தமான தலைவர்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2565573, 011-2565565.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. 011-3068185.
தொலைநகல் இல. : 011-2572940.

3-601

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.